அன்பே சிவம்




அமரர்

# திருமதி. நாகபூஷணி அம்மை தியாகராஜா

அவர்களின்

# நினைவுமலர்

## SOUVENIR

## 02.08.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயஞ்சலி



எமது அன்புத் தெய்வத்தாய்
நாகபூஷனி அம்மையாரின்

# நினைவு மலரை

தாயாரின் பாத மலர்களை சூட்டி
பாசத்துடன் வணங்குகிறோம்.

மகள்: யசோதை
மருமகன்: சிறிதரன்
பேரன்: மயூரன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விநாயகர் துணை
ஓம் சரவணபவன்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 |  | 03 |
| 05 | | 07 |
| 1932 | | 2011 |

அமரர்

# திருமதி. தி. நாகபூஷணி அம்மை


### திதி நிர்ணய வெண்பா

சீர்சால் கரவர்ஷம் சேர் ஆனி பதினெட்டு
சேர்ந்த பூர்வபக்க திருதியை - பார்போற்ற
நங்கை நாகபூஷணி நல்லாள் சென்றடைந்தாள்
ஐங்கரன் பாதம் நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி



விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமுன் கனிந்து

வேழ முகத்து
விநாயகனைத் தொழ
வெள்ளைக் கொம்பன்
விநாயகனைத் தொழக்
துள்ளி யோடுந்
தொடர்ந்த வினைகளே
அப்பம் முப்பழம்
அமுது செய்தருளிய
தொப்பை யப்பனைத்
தொழவினை யறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாகபூஷணி அம்மை தியாகராஜா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து மா கடல் பரப்பிலே அழகிய தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான மலேசியாவில் கோலலீப்பிஸ் (Kuala lipis) இல் 21-05-1932ம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக் கல்வியை மலேசியாவில் பயின்றார். அமரர் நாகபூஷணி அம்மை அவர்களின் பெற்றோர் இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் அழகிய இலங்கைத் தீபகற்பத்திற்கு மீண்டும் திரும்பிய போது அமரரும் இலங்கை வந்தார்.

இலங்கையில் வடபால் அமைந்த யாழ்ப்பாணக் குடா நாட்டிலே கடல்வளமும் நிலவளமும் நிறைந்த தொல்பெரும் தான்தோன்றி வரதன் புலோ ஸ்ரீ சித்தி விநாயகரதும், ஸ்ரீ முத்துகுமார சுவாமியினதும் ஆலயங்கள் இணைந்து மிளிரும் மூளாயம்பதியில் தனது இளமைப்பருவ வாழ்க்கையை ஆரம்பித்தார். இரு மரபேந்திய முதலி வம்சத்தில் தெற்கு அராலி சிற்றம்பலம் சிதம்பரப்பிள்ளை (உதவி வைத்திய கலாநிதி) அவர்களுக்கும் மூளாய்பதியில் இரு மரபினும் தூய்ய மாணாமுதலி வம்சத்தில் தோன்றிய பார்வதிப்பிள்ளை அவர்களுக்கும் ஏகபுத்திரியாக அமரர் பிறந்தார். நயினை நாகபூஷணி அம்பாள் திருவருள் வேண்டி கிடைக்கப்பெற்ற குழந்தை என்பதால் பெற்றோர் அமரருக்கு நாகபூஷணி அம்மையென திருநாமம் சூட்டினர்.

மலேசியாவிலேயே கல்வியில் மிக சிறந்து விளங்கிய இவர் சங்கீத கலையிலும் சிறந்து மேடைகளில் பாடி பரிசில்களையும் சமய அறிவுப் போட்டிகளில் தங்கப்பதக்கத்தையும் சிறுவயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற நான்கு வருடங்கள் இவரது கல்வி ஸ்தம்பித்த நிலையில் அப்போதைய அரசாட்சி மொழியான ஜப்பானிய மொழியையும் பயின்று திறமைசாலியாக திகழ்ந்தார். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின் இலங்கை திரும்பி தனது இடைநிலைக் கல்வியை ( க. பொ. த. சாதாரணம்) யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பயின்று திறமைச் சித்திகளைப் பெற்ற இவர் மலேசியாவில் இரண்டாம் உலகப்போர் காரணமாக, நான்கு வருடகாலம் வீணாகிவிட்டதால் இலங்கையில் உயர்கல்வி, பல்கலைக்கழகக் கல்விபெற ஆறு ஆண்டு ஆகும் என்பதால், தனது இடைநிலைக் கல்வி திறமைச்சித்திகளை வைத்து இந்தியாவில் உள்ள பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்து திருச்சிக்குச் சென்று புனிதச்சிலுவை கன்னியர் மடம் **(Holy Cross Convent)** என்ற கல்லூரியில் படித்தார். முதலில் விஞ்ஞானப்பிரிவு கல்வியை படிக்க ஆரம்பித்த இவருக்கு நெருப்பு காய்ச்சல் காரணமாக, திரும்பி இலங்கைக்கு வந்து நோயை குணப்படுத்தி மீண்டும் திருச்சிக்கு கல்வியை தொடரப்போனபோது விஞ்ஞானப்பிரிவு செய்கை முறை பாடங்களை தவறவிட்ட காரணத்தால் கலைப்பிரிவிற்கு மாறி தனது கல்வியைத் தொடர்ந்து நான்கு வருடங்களில் அரசியல் பொருளாதாரப் பட்டதாரி ஆனார்.

அகில இலங்கை இந்து சபை மூலம் ஆசிரியையாக முதல் நியமனத்தை யாழ்/காரைநகர் இந்துக்கல்லூரியில் 1960ம் ஆண்டு ஆரம்பித்து 1989ம் ஆண்டுவரை ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 29 ஆண்டுகள் கடமையாற்றி தனது சேவையை செய்து முடித்தார். அமரர் நாகபூஷணி அம்மை தமது கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் என்பவற்றில் சிறப்புப்பெற்ற பின் பெற்றோர் நிச்சயித்த திருமண வாழ்க்கையில் புகுந்தார். வைத்திய கலாநிதியும் தனது சொந்த மைத்துனருமாகிய அமரர். செ. தியாகராஜா அவர்களை திருமணம் புரிந்து சீரும் சிறப்புமாக

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கு அமைய இல்வாழ்க்கையைச் சிறப்பாக நடத்தினார்.

அமரர் தம்பதிகளுக்கு ஆண்டு நான்கு அகவை கடந்தும் மக்கட் செல்வம் இல்லாமையால் பெரும் மனக்கவலை கொண்ட தம்பதிகள் பாம்பணையில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் கூர்ம அவதாரம் எடுத்துக் கோயில் கொண்டருளியிருக்கும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தாள் பணிந்தனர். வேண்டுவார் வேண்டுவதை நல்கும் கண்ணபிரான் அருளால் மகள் பிறந்தார். தமது செல்வப்புத்திரிக்கு கண்ணபிரான் தாயார் நாமமான யசோதை என பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

அமரர் நாகபூஷணி அம்மை தான் கல்வி போதித்த யாழ்/காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திலேயே மகளையும் கல்வி கற்பித்தார். தமது புத்திரி யாழ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சிறப்புப் பட்டதாரியான போது மனமகிழ்ந்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடம் 1987ம் ஆண்டு இவர் பயின்று கொண்டிருந்த போது தனது தந்தையார் தியாகராஜாவை இழந்தார். தந்தையின் பிரிவு தாங்கமுடியாது மனமுடைந்து பல்கலைக்கழகக்கல்வியைத் தொடரமுடியாது என மறுத்த மகளுக்குப் பக்கபலமாக மனத்தைரியம், அரவணைப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து பல்கலைக்கழக கல்வியை முடித்து பட்டதாரி ஆவதற்கு உறுதுணையாக நின்றார். அமரர் நாகபூஷணி அம்மை அவர்கள் தமது கணவரை இழந்த துயரை மனதிற்குள் தாங்கிக் கொண்டு மகளின் கல்விக்கு ஊக்கம் கொடுத்தார்.

அமரர் தன்னிடம் கல்வி பயின்ற மாணவர்களின் கல்வியில் முழுக்கவனத்துடன் கண்டிப்பும் கனிவும் காட்டி உயர்த்தினார். அமரர் தமது உறவினர்களின் குழந்தைகள் ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள், அயலவர்களின் குழந்தைகள், நண்பர்களின் குழந்தைகள் எல்லோரின் கல்வி வளர்ச்சியில் கருத்துடன் பாடுபட்டு உதவிகள், ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கியும் கல்வி போதித்தும் வந்தனர்.

அமரர் நாகபூஷணி அம்மையாரின் மாணவர்களில் பலர், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், கணக்கியலாளர்கள், வங்கியியலாளர்கள் என சகல துறைகளிலும் மிளிருவதைக் கண்டு பெரும் உவகை கொண்டார். தமது மகள் யசோதை பட்டதாரியாகிய பின் ஆசிரியத் தொழிலை தேர்ந்தெடுத்து புனித லூசியா மகாவித்தியாலயம் கொட்டாஞ்சேனையில் பணி புரிந்தபோது பெரு மகிழ்ச்சியடைந்து, எப்படி மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும், எப்படி ஒரு சிறந்த ஆசிரியராக திகழ வேண்டும் என்ற அறிவுரைகள் பலவற்றை மகளுக்கு வழங்கி மகிழ்ந்தார். அமரர் நாகபூஷணி அம்மையாரிடம் படித்த மாணவர்கள் பலர் ஆசிரியர்களாகி அமரருடன் சேர்ந்து யாழ்/காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் பணியாற்றியுள்ளார்கள். இதற்காக பெருமையும் புளகாங்கிதம் கொண்டு எனது மாணவர்கள் சிறந்த ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர் என பெருமகிழ்ச்சியடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பூத்த பன்றித்தலைச்சி அம்மன் பதி கொண்ட சாவகச்சேரி மட்டுவில் தெற்கில் தொல்மரபுசார் சான்றோர் வழிவந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் பொன்னுசாமி (தபால் அதிபர் மட்டுவில் தெற்கு) மங்கையர்க்கரசி தம்பதிகளின் தவப்புதல்வன் சிறிதரன் (கணனி நிகழ்ச்சி தொகுப்பு ஆய்வாளர் கனடா) அவர்களை 1995ம் ஆண்டு தமது அருந்தவப்புத்திரிக்கு திருமணம் செய்து மகிழ்ந்தார். கணவரை இழந்து தனித்து நின்ற அமரர் தமது புத்திரிக்கு வேண்டிய கல்வி, திருமணம் போன்ற சிறப்புக்களைச் செய்து மனநிறைவு கொண்டார். தனக்கு புத்திரன் இல்லாக்குறை நீங்க நல்லதொரு மகனாக மருமகன் சிறிதரன் கிடைத்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

சிறிதரன் யசோதை தம்பதிகளுக்கு மயூரன் என்ற மாணிக்கம் கிடைக்கப்பெற்றதும் அமரர் நாகபூஷணி அம்மை அளப்பரிய மகிழ்ச்சி அடைந்தார். பேரன் மயூரன் வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டினார். பிள்ளைகள், பேரன் கனடா நாட்டில் வசித்தபோது மகளுடன் தொலைபேசியில் மயூரன் படிப்பு பற்றியும் தாய் மொழி தமிழ் அதனை பேரனுக்குக் கற்பித்துக் கொடுக்கும்படி. "நீர் ஒரு ஆசிரியராக இருந்தீர். மயூரனுக்கு தமிழ் வீட்டில் சொல்லிக் கொடுக்க வேணும்" எனவும் மகளுக்கு கூறுவார். தனது பேரன் மயூரன் மற்ற பாடங்களைப் போல தாய்மொழியிலும் சகலதுறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது அமரரின் ஆவல்.

கணீர் என்ற குரலில் தேவாரம், திருவாசகம், கர்நாடக இசைப் பாடல்களையும் பாடக்கூடிய சங்கீத கலைஞானம் பெற்ற இவர் மூளாயம்பதியில் வீற்றிருக்கும் தான்தோன்றி வரதம்புலோ ஸ்ரீ சித்தி விநாயகருக்கும் ஸ்ரீ முத்துக்குமாரசாமிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருவெம்பாவை முதற்பூஜையை இறுதிவரை சிறப்பாக நடத்திவந்தார்.

அமரரின் குணநலன்களைப் பார்த்தால் அன்பு, பண்பு, இரக்கம், உதவி செய்யும் கருணை உள்ளம், கடமை உணர்ச்சி, நேர்மை, கண்டிப்பு, கனிவு, விருந்தோம்பல், சமயாசாரம், தெய்வீக வழிபாடு ஆகியவை ஒருங்கமையப் பெற்ற குணக்குன்று. அவர் கல்விச் செல்வமே மிகப்பெரிய செல்வம் என எல்லோருக்கும் உணர்த்தித் தானும் முன்னுதாரணமாக

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற குறளுக்கேற்ப வாழ்ந்து காட்டினார். அன்னார் அவரின் வயதுக்கேற்ப படிப்படியாக சுகயீன தளர்ச்சி ஏற்பட்டாலும் ஒருவரும் எதிர்ப்பார்க்காதவண்ணம் ஓரிரு கணப்பொழுதில் கடந்த 03.07.2011 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இறைவனுடன் இரண்டறக் கலந்து கொண்டார். அமரத்துவம் அடைந்த அன்னாரின் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# life History of Late Nagapoosani Ammai Thiagarajah

Late Nagapoosani Ammai Thiagarajah was born in Kaula Lipis of Malaysia one of the beautiful south east Asian countries in the Indian Ocean on 21.05.1932. She obtained her primary education in Malaysia. But she returened to Sri Lanka ("pearl of Indian ocean") when her parents came back after the 2nd world war.

She commenced her teenage life in Moolai, in the Jaffna peninsula of Northern Sri Lanka. Moolai is a village filled with sea and land resources and blessed with the twin temples of Sri Sithi Vinayagar and Sri Muthukumaraswamy.

Dr. Sithamparapillai (Arali South) and Parvathipillai (Moola) Couples got a only daughter Nagapoosani ammai. Since the child was born with the blessings of Nayinai Nagapoosani Ambal, she was named as Nagapoosani Ammai.

In Malaysia, she was good at her studies and music. She obtained prizes at the stages for her performances of Karnadic Music and she received gold medals for religious knowledge competitions at her pre-teen age.

During the 2nd World War, She lost four years of the her studies. But, she studied and shined in Japanese language, Which was the official language at that time.. Following the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

end of the war, she came back to Sri Lanka with her parents. She continued her studies at Jaffna Hindu Ladies College and obtained credit passes in the GCE/OL. As she felt that it would take six years to obtain higher education in Sri Lanka for that time lost four years in Malaysia due to the war, she applied with her credit passes to the university in India. subsequently she went to India and followed her studies at the Holy Cross Convent in Trichi, and followed science subjects. But, she had to return to Sri Lanka as she was caught with pneumonia, when she returned to India, she was unable to continue in science field as she failed to complete her practical tests. So, she switched to arts field and became an arts graduate in political economics.

She got her first appointment as a teacher in the year of 1960 at Karainagar Hindu College, through All Ceylon Hindu Sabbah. She continued at the same school for 29 years until she retired in 1989.

On obtaining glory with her education and employment, she got married according to her parents wishes, Dr.(late) S. Thiagarajah, her cousin and led a life according to Thiruvalluvar says.

"Anpum aranum udaithayin illvalkai
panpum payanum athu"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After marriage, they did not have a child for four years. They felt very sad. and went to Ponnalai to worship at God Varathrajaperumal temple. God Kannan blessed them with a daughter. The parents named their child as Yasothai, the name of god Kannan's mother.

Late Nagapoosani Ammai Thiagarajah sent her daughter to the same school, where she was teaching Dr.Thiagarajah Maha Vidyalayam, Karainagar. She was very happy when her daughter obtained a special degree in economics at the University of Jaffna. Yasothai lost her father when she was in her second year in the university. The demise of Yasothai's father made her so sad and to refuse to continue her university education; however her mother Late Nagapoosani Ammai hiding the sorrow of her husband's death, consoled Yasothai being her intimate friend and made her to become a graduate completing the university education.

She was very strict and kind towards her students and their studies and helped them to come up in there life. She was very kind to the children of her relatives, cousins, neighbours and friends. She showed interest in their studies and offered counseling and advices to them.

She was very happy to hear and see her students being doctors, engineers, lecturers, teachers, accountants and bankers and so on...and was very happy to see her graduate



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

daughter Yasothai was appointed as a teacher at St. Lucia's Maha Vidyalaya, Kotahena, Colombo. She gave her daughter advice, to be a good teacher. So many students who studied under her became teacher at Dr. Thiagarajah Maha Vidyalaya, Karainagar. She was very proud in saying that her students were good teachers.

Famous Panry Thalachchi Amman temple is situated at Madduvi south, Chavakachcheri. Here there was a gentleman (late) Ponnusamy (Post Master, Madduvil south) and Mangaiyarkarasi. Their beloved son was Sritharan (Computer programme editing researcher, Canada). Late Nagapoosani Ammai was happy to make her beloved daughter Yasothai to marry this young man in 1995. Being a lonely widow, she offered her only daughter necessary education and made her to settle in married life. Also, she was happy to have a son-in-law like her son. She felt very, very happy to have a grandson. Grand son named Mayuran was born to the couple Srithran and Yasothai. She showed interest in his childhood education. When her daughter, son-in-law and grandson were living in Canada, she always phoned to her daughter Yasothai to find out about Mayuran's education and advising her to teach Mayuran, his mother Language Tamil at home. Her anticipation was that her grandson should be bright in his mother Language like other subjects and in other fields.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

She possessed with the musical knowledge to chant and recite the 'theveram and thiruvasakam' and sing Karnadic songs with her silver voice. She was conducting the 'thiruvempavai poojah' from the beginning to end, on special manner, at the temples of 'Thanthonry Sri Varathanpulo Sithi Vinayagar and Sri Muthukumaraswamy situated at Moolai.

When we consider her positive qualities, she was filled with kindness, decency, pity, helping mind and honesty, strictness, hospitality, religious mind, and deity worship. She lived an exemplary life making all to feel that 'education is the best wealth'. 'Thiruvalluvar' said

"Vaiyathul valvangu valpavan vanuraiyum
Theivathul vaikkappadum"

She became little by little feeble and sick due to her old age and unexpectedly within moments passed away on Sunday noon, the 3rd July, 2011 peacefully.

Let us pray God to rest her in peace.

***Aum Shanthi !, Aum Shanthi !!, Aum Shanthi !!!.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஒரு கோயில்

## அம்மாவின் பிரிவுத்துயர்

"தாயிற் சிறந்த கோவிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

எத்துணை பாரிய துன்பம் வரும் போதும் எமது நாவில் உச்சரிக்கப்படும் தாரக மந்திரம். அம்மா... அம்மா... மாபெரும் கவலை வந்தாலும் தாயின் மடியில் தலை வைத்து படுத்தால் எல்லாத் துன்பமும் பறந்தோடிவிடும். தந்தையுடன் கல்விபோம் தாயுடன் அறுசுவைபோம். ஆனால் எனது அருமைத்தாயுடன் அனைத்தும் போய்விட்டது. எனது தந்தையுடன் எனது பல்கலைக்கழகக் கல்வி அழியாமல் தாய்க்கு தாயாக தந்தைக்கு தந்தையாக நின்று தனது கடமையைச் செய்து என்னை உயர்த்திய தெய்வத்தாய் அம்மா நீங்கள். அன்பு, பாசம், கல்வி, கலைகள், சிறப்பு, மேன்மை.... என வார்த்தைகளால் சொல்லமுடியாத அனைத்தையும் என் அம்மா தந்தார். நான் கவலைகளால் கலங்கி நின்ற பல சந்தர்ப்பங்களில் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி உறுதுணை கொடுத்த அம்மா எங்கே போனீர்கள்? எனக்கு ஆறுதலும் அறிவுரையும் தர வர மாட்டீர்களோ? மிகவும் கண்டிப்பான தாயாராக இருந்த நீங்கள் 1987ல் எனது தந்தையாரின் திடீர் மறைவின் போது, நான் மனமுடைந்து நின்றபோது பக்கபலமாக இருந்து, உங்கள் உள்ளத்தில் மறைந்து கிடந்த பாசம், பரிவு கண்டு மனோ தைரியம் அடைந்தேன்.

அம்மா நீங்கள் அன்புத் தெய்வமாக, உன்னத தாயாக, புரிந்துணர்வுள்ள அம்மாவாக, பிரியமான சினேகிதியாக நல்லதொரு ஆசிரியராக, முன்மாதிரியான வழிகாட்டியாக எல்லாம் இருந்துவிட்டு இறுதிக்காலங்களில் எனது குழந்தையாக மாறி இருந்தீர்கள். எனது பழைய அம்மா மீண்டும் கிடைக்க மாட்டீர்களோ என ஏங்கிய ஏக்கம் நிறைவேறாமலே போய்விட்டது. எனது அன்பு அம்மாவே உங்கள் இடத்தை எனக்கு யாராலும் நிரப்ப முடியாது.

மகள் யசோதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mother is a Temple (Annai Aur Aalayam)

### Sorrow of the demise of Mother

"Mother and father are my first God". How big the sorrow, we firstly utter the word 'mama, mama' (ammah, ammah). Any big sadness will run away once we lay our head on mother's lap. Education will go away along with father and the six kinds of tastes in relation to food will go along with mother. But, to me, everything gone away along with my mother. Oh, you are my mother god who saved my continuation at the university after the demise of my father. You performed your duty perfectly as a mother as well as a father to raise me in life. My mother gave everything, such as love, kindness, education, arts and all for which I have no words to express to. So many times whenever I was suffering with so many problems, she consoled me, guided me and guarded me. 'Mother where have you gone now? Won't you come to console and advise me right now? You were a strict mother. But, when I heart broken following my father's sudden demise in 1987, you supported me showing the love and kindness hidden in your mind. It made me strengthen my will power'.

' Mother, you had had been a kind deity, a lovely and understanding mother, a sincere friend, a good teacher, a guard and an exemplary guide and finally turned yourself into my child. My expectation whether my old mother won't be found once more went futile. My dearest mother there is nobody to replace you'.

***Daughter:***
***YASOTHAI***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Loving Grandma

A prayer for you grandma, asking God about to bless you. I can still remember the fun we had together you always call "mayur". Now I can not hear the word in my life ever again. She was very active and when I came to Sri Lanka she receive me and send me off.

I will never forget you is my life, you are always special to me. You are my mom's loving mom I loss my loving grandma, my mom loss loving mom, my dad loss loving mother in low. I am sorry about our family loss.

**Loving grandson**
**Mayuran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பால் நெஞ்சில் நடம் பதித்த உத்தமி

**"அத்தி முகவனை நித்தம் நினைப்பவர்**
**சித்தம் மகிழ்வொடு முத்தி பெறுவரே"**

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் மூளாய்ப்பதியில் குடிகொண்ட வரதன்புலோ சித்தி விநாயகர் மீது அளவிலாத பற்றுக்கொண்ட அமரர் நாகபூஷணி அம்மை அவர்கள் ஐங்கரனின் திருவடியில் சுகித்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

அமரர் நாகபூஷணி அவர்கள் நல்லதோர் சமுதாயத்தை வளர்த்தெடுத்த ஆசிரியை. அன்பின் சிகரம், பண்பின் உறைவிடம், சிறந்த ஒழுக்கமும், தாய்மொழியையும் நற்பண்பினையும் பேணிவளர்த்த நல்முத்து மாணவர்கள் மனங்களில் நிறைந்து ஒலிக்கும் நாமம் "நாகபூஷணி ரீச்சர்" என்பதாகும். உயர்ந்த ஆசாரசீலமும் நிறைந்தவர். உள்ளத்தால் உயர்ந்த உத்தமி.

எந்த நேரமும் எதையாவது படித்த வண்ணம் இருப்பார். மகளும் தன்னைப் போலவே படிக்க வேண்டும் என்று விரும்பினார். அவரது கனவு பூரணத்துவம் பெற்றுவிட்டது.

யா/ காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் காலப்பகுதியில் எனக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு நிரந்தரமாக நிலைத்துவிட்டது. "விட்டகுறை தொட்டகுறை" என்பார்கள். அது போல எங்கள் தொடர்பும் உயிரோடு இணைந்து விட்ட உறவு.

இடம் பெயர்ந்த காலப்பகுதியில் நான் பெற்ற அனுபவங்கள் பல. முகமலர்ந்து இன்முகத்துடன் வரவேற்று "நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உடன்பிறவாச் சகோதரி இங்கேயே தங்கிவிடும்" என்றார். அமரரின் தாயார் "ஆச்சி" அன்பின் சங்கமம். மகள் யசோதை சிரித்த முகமும் இனிய சுபாவமும் கொண்டவர். கோபத்தையோ, வெறுப்பையோ, சினத்தையோ அங்கு காணமுடியாது. அஃது ஒரு இனிய அநுபவம். அவர்கள் வீடு எனது வீடு போல அங்கு தங்கியிருந்த நாட்கள் பசுமையானவை.

எனது கல்வியியல் டிப்ளோமா பட்டம்பெற்ற அதேநாள் அமரரின் மகள் யசோதை இளங்கலை மாணி பட்டம் பெற்றார். யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலும் சந்தித்துக் கொண்டோம். சிலநாட்களில் அவர்கள் கொழும்புக்கு மகளின் வேலை நிமித்தம் வந்தனர். ஆனால் எனது தொடர்பு நீடித்தது. எப்பொழுதும் அதே சிரிப்பும் வரவேற்பும் தான். ஒரு நாளாவது முகம்சுழித்து நான் பார்த்ததில்லை.

உருத்திரா மாவத்தையில் சிறு சுகவீனம் ஏற்பட்ட நிலையில் இருந்தார். என்னைத் தெரிகிறதா? என்று கேட்டேன். "நீர் என் உடன்பிறவா சகோதரி இங்கேயே தங்கிவிடும். உமக்கும் ஒரு அறை உண்டு". என அன்பொழுக பேசினார். ஒவ்வொரு முறையும் இதே வரவேற்பு தன்னைப்போல பிறரையும் நேசிப்பவர் இத்தகைய அன்புப் பொக்கிஷத்தை இழந்துவிட்டேன்.

நம் நெஞ்சம் நமக்கு பொய் சொல்லாது. ஆழ்மனதில் இருந்து சில நினைவுகள் எழும். அது எப்பொழுதும் உண்மை. சென்ற மாதம் ரீச்சரின் நினைவு அடிக்கடி வந்தது. அவவிற்கு ஏதோ சுகமில்லை. அவவைப் பார்க்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினேன். உருத்திரா மாவத்தையில் உள்ள அவரது வீட்டில் தேடினேன். காவலாளியிடம் வினவினேன். பக்கத்து அறைகளில் உள்ளவர்களிடம் விசாரித்தேன். வேறு இடத்திற்கு அழைத்து சென்று விட்டார்கள். அறையில் உள்ள பெண்மணியிடம் விசாரித்தால் தெரியும் என்றார்கள். ஏறக்குறைய ஒரு மணித்தியாலம் வரை காத்திருந்தேன். ஒரு பயனும் இல்லை. ஏமாற்றத்துடன் திரும்பிப் போனேன். தெரிந்தவர்களிடம் தகவல் அறிந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டேன். என்ன பயன்? பத்திரிகையில் வந்த தகவலை எனக்கு சொன்னார்கள். கடைசியாக ஒரே ஒரு முறை உயிருடன் பார்க்க கொடுத்து வைக்கவில்லை. பிறப்பதும் இறப்பதும் உலக நியதி. யாராலும் மாற்ற முடியாது. ஒரு மனிதனின் பெருமையை அவர் விட்டுச் சென்ற சாதனைகளே பறைசாற்றுகின்றன. பிரிவால் நெஞ்சம் கனக்க கண்ணீரைக் காணிக்கையாக்கி அவரது பிரிவால் துயருறும் அவரது செல்வமகள், மருமகன் அன்புப்பேரன் உறவினர் ஆகியோருக்கு சமர்ப்பிப்பதுடன் அன்னாரின் ஆத்மா ஐங்கரனின் திருவடியில் இளைப்பாறவும் சாந்தி பெறவும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

30/2 10வது ஒழுங்கை
வைரவப் புளியங்குளம்
வவுனியா
024-2221605

செம்மொழிச் செல்வி சிவநெறி
பிரச்சாரகர், தமிழ்த்திலகம்
பண்டிதை
செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்
B.A.DIP





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் கவர்ந்த ஆசிரியை

எமது ஆசிரியை அவர்கள் சிதம்பரப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளுக்கு ஏகபுத்திரியாக 21.05.1932ல் மலேசியாவில் நாகபூஷணி அம்மையார் பிறந்தார். எமது ஆசிரியை 1960 களில் நியமனம் பெற்ற நாள் தொடக்கம் 1989ம் ஆண்டு ஓய்வு பெறும்வரை ஆசிரியப் பணியை ஏற்ற இறக்கமின்றி சீரான முறையில் ஆற்றியவர் என்றுமே தன் கடமையில் தவறியதில்லை. உயர்வான சமூகம் ஒன்றினைக் காணவிளைந்தார். மாணவர்கள் நல்வாழ்வு பெறும் நோக்குடன் கல்வியை சீரிய முறையில் வழங்குவதில் உளமார்ந்த அக்கறையுடன் செயற்பட்டார்.

அமரர் பால் கொண்டிருந்த அபிமானம் காரணமாக, மூளாய், மாவடி போன்ற இடங்களில் இருந்த மாணவர்கள் காரைநகர் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று கல்லூரிக்கு புகழ் சேர்த்தனர். அன்னார் வலந்தலைச் சந்தியில் இருந்து பேரூந்தில் இறங்கி வரும்போது மீண்டும் செல்லும்போதும் மாணவர்கள் அவரை சூழ வரும் ஒரு காட்சி மறக்க முடியாதது.

அப்பியாசப் புத்தகங்கள் எல்லோரினதும் ஒழுங்கு முறையாக வகுப்பறையில் பார்வையிடப்படும் தவறின் ஓய்வு நேரப்பாட வேளைகளில், சில சமயங்களில் வீட்டுக்கு எடுத்துச் சென்று பார்வையிட்டு வழங்கப்படும் தமிழ்மொழி, இலக்கியம், சைவசமயம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் பாண்டித்தியம் பெற்றவர். க.பொ.த சாதாரண பரீட்சையில் ஏனைய பாடங்களில் சித்திபெற தவறியவர்களுக்கும் இவரது பாடங்களில் திறமைச்சித்தி கிடைக்கும்.

தவறுகளுக்கான தண்டனைகள் அளவுடனும், தவற்றினை திருத்தி கொள்வதற்கான ஆலோசனைகளும் ஒரே சமயத்தில் வழங்கப்படும். மாணவர்களுடன் கண்டிப்பும் அதேசமயம் அன்பும் பாசமும் செலுத்தும் மனப்பாங்கு உள்ளவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் பணியுடன் நின்று விடாது மாணவர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக ஆலோசனைகளும் எச்சரிக்கைகளும் வழங்கப்படும். மாணவர்களின் பிரச்சனைகளை கையாள்வதில் பாடசாலை ஒழுக்காற்று குழுவின் நீண்ட கால அங்கத்தவர். அமரர் கலாநிதி தியாகராஜா அதிபர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

அமைதியான அழகு, ஆழ்ந்த ஊடுருவிச் செல்லும் பார்வை, அரச பணியாளர், மகளிருக்கான நல்ல நடை, உடை, பாவனை, அணிகலன்கள் என்பவற்றிற்கு முன் உதாரணமாக திகழ்ந்தவர்.

அமரர் நாகபூஷணி அம்மை மூளாய் கிராமத்தை வதிவிடமாக கொண்டிருந்த போதிலும் காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆற்றிய பயனுள்ள பணி காரணமாக, காரைநகர் கிராம மாணவர்கள், பெற்றோர்கள், மக்கள் மனங்களை கவர்ந்து உயர்ந்த ஸ்தானத்தை பெற்றுக்கொண்டார்.

அன்னாரின் ஆத்மா காரைநகர் திண்ணப்புர பகுதியில் திருநடனம் செய்யும் தில்லைக்கூத்தன் திருப்பாதங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

எஸ். கே. சதாசிவம்
இளைப்பாறிய அதிபர்
இடைப்பிட்டி
காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

*திருச்சிற்றம்பலம்*



பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## திருவிசைப்பா

பாலுக்கு பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒன் கடவிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன் பருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுத் தருள் வாயே
தம்பிதனைக் காகவனத்தணைவோனே
தந்தைவனத் தாலருள் கைக் கனியோனே
அன்பர் தமக் காலநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானை முகப் பெருமானே.


## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி



பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா!

வாக்குண்டாம் நல்லமன முண்டாம்
மாமலரால் நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான்
பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

(ஔவையார் அருளியது)

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞானும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் மூஷிகவாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைப்பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியப்பட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடமென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விகைழல் சரணே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி

வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்-
வெள்ளை அரியாசனத்தில் அரசரோடு எம்மை
சரியாசனம் வைத்த தாய்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்

வெள்ளைத் தாமரை பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதம் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட் பொருளாவாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
        தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
        சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்
        பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
        சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
        தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
        பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
        கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
        சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ
உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
வடநூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலா வல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே
நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய்
சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பார்
கூட்டும்படி நின் கடைக்கண்
நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே.

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பஞ்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை டோற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக.
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக.
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக.
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தன்னைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்கஎளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்ட துவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமு மெனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
எந்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோ ரடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலக்ஷ்மி மிகளில்
வீரலக்ஷ்மி மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
அன்றே மறப்பது நன்று"

எமது அன்புத் தெய்வத் தாயிற்கு உதவிகள் செய்து அன்பும், ஆதரவும் கொடுத்த அன்பு உள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றி.

நாம் கனடாவில் வாழ்ந்து வருவதால் என் அன்பு அம்மாவுக்கு தேவையான சரீர உதவிகள், மருத்துவத் தேவைகள் என வார்த்தைகளால் சொல்ல முடியாதளவுக்கு உதவிகள் செய்த சிவபாலன் சித்தப்பா குடும்பத்தினருக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன், எனது தந்தையின் மறைவுக்கு பின் தந்தையார், தாயார் ஸ்தானத்தில் இருந்து "வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியாது" என்பதற்கமைய இரகசியமாக அமைதியாக அவர்கள் எமக்கு பல உதவிகளையும், கடமைகளையும் செய்தமை எத்தனை ஜென்மத்திற்கும் மறக்கமுடியாது.

எனது தாயார் தனிமையில் இருந்த போதும், நோயுற்ற போதும் உதவிகள் செய்த அயலவர், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றி. இலண்டன் வானொலியின் எனது தாயாரின் மரண அறிவித்தலை ஒலிபரப்பு செய்யவைத்த தம்பி அருளீசன் குடும்பத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எனது அம்மாவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாப செய்திகளை அனுப்பி ஆறுதல் அளித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மரணச்சடங்கில் தாயாரைப் பற்றிய நினைவு உரையாற்றிய Dr.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், தாயாரின் மரணச் செய்தியை வெளியிட்ட Karainagar.com இணையத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளத்திற்க்கும், தமது அன்பு ஆசிரியையின் நினைவுகளை எழுதி Karainagar.com, karai.news.com இணைத்தளங்களில் வெளியிட்ட சதாசிவம் மாஸ்ரருக்கும் தமது அன்புத் தோழியின் நினைவுகளை பகிர்ந்த யோகா ரீச்சருக்கும் நன்றி.

இந் நினைவுமலரை அச்சிட்டுத் தந்து உதவிய "தமிழ்மாலை" அச்சகத்திற்க்கும் நன்றி.

அன்புடன் ஆறதல் கதைகள் கூறி மருத்துவ உதவி அளித்து கவனித்து வந்த Dr. திவாகரன் அவர்களுக்கும், அவரது ஊழியர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக என்னை நல்ல பிரஜையாக நல் மகளாக தலை நிமிர்ந்து வாழக்கூடிய வகையில் உருவாக்கிய அன்புத் தாயாருக்கு எத்தனை பிறவிக்கும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். மீண்டும் அவருக்கு மகளாக பிறக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

நன்றி


மகள் - யசோதை
மருமகன் - சிறிதரன்
பேரன் - மயூரன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வரதன் புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்



வடிவமைப்பு மற்றும் அச்சுப்பதிப்பு
தமிழ்மாலை பதிப்பகம் - 011 485 11 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org